முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.2.2026) சென்னையில் நடைபெற்ற, மு.அ.மு. அருணாசலம் முருகப்பன் அவர்களின் மகள் வேதிகா மெய்யம்மை சாஹில் ஆகியோரது திருமண விழாவில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

பிப். 12 - அன்று ஆர்ப்பாட்டம்!

ம.தி.மு.க.வினர் திரளாகப் பங்கேற்பு!

பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை!

சென்னை, பிப். 9 -

தமிழ்நாட்டை வஞ்சிக் கும் ஒன்றிய அரசின் பட் ஜெட்டைக் கண்டித்து பிப்ரவரி 12ல் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க.வினர் திரளாக கலந்து கொள்ளுமாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசின் வரவு செலவு திட்டத்தில் தமிழ் நாட்டிற்கு புதிய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படாமல், பாரபட்சமாக நிதி ஒதுக்கீடு செய்து ஒன்றிய பா.ஜ.க .அரசு தமிழ்நாட்டை வஞ்சித்து இருக்கிறது.

மாநிலங்களின் பங்களிப்பை உரிய முறையில் 16 ஆவது நிதிக் குழு அங்கீகரிக்க முற்பட்ட போதும், நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டு, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப் பைச் செலுத்தி வரும் தமிழ்நாட் டிற்கு மற்ற வளர்ச்சியடைந்த மாநிலங்களைக் காட்டிலும் நிதிப் பகிர்வு சதவீதம் குறைக் கப்பட்டு இருப்பது தமிழ் நாட்டுக்கு செய்யப்பட்டு இருக்கும் பச்சை துரோகம் ஆகும்.

உத்தரப்பிரதேசத்திற்கு 2 லட்சத்து 68 ஆயிரத்து 910 கோடிரூபாய், பீகார் மாநிலத் திற்கு 1 லட்சத்து 51ஆயிரத்து 831 கோடி ரூபாய், மத்தியப் பிரதேசத்திற்கு 1லட்சத்து 12 ஆயிரத்து 133 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கும் பா.ஜ.க. அரசு. தமிழ்நாட்டிற்கு வெறும் 62ஆயிரத்து 530 கோடி ரூபாய் மட்டுமே நிதி வழங்கி இருக்கிறது. தமிழ்நாட்டிற்கான வரிப் பகிர்வு 4.097 விழுக்காடு என்ற மிகச்சொற்ப அளவிலேயே அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இருக்கும். இதனால் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டிற்கு ஆண் டிற்குச் சுமார் 5,000 கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்படும்.

சரக்கு மற்றும் சேவைவரி விதிப்புச் சீரமைப்பில் மாநிலங்களுக்கான நிதி வருவாய் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கான ஒன்றிய வரிகளின்பங்கு சுமார் 1,200 கோடி ரூபாய் அளவில் குறைக்கப்பட் டுள்ளது என் பதும் கண்டிக்கத்தக்கது ஆகும்.

மும்மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்காததன் காரணமாக அனைவருக்கும் கல்விதிட்டத்திற்கான 3,548 கோடி ரூபாய், தமிழ் நாடு ஜல் ஜீவன் திட்டத்தை நாட்டிலேயே சிறப்பாகச் செயல் படுத்திய போதிலும் ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்காத நிதி 3,112 கோடி ரூபாய் நிதி குறித்தும் எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இல்லை.

ஜல்ஜீவன் குடிநீர்த் திட் டத்திற்கு 2025-26ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் 67 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு, தற்போது திருத்திய மதிப்பீட்டில் வெறும் 17 ஆயிரம் கோடி ரூபாய் என ஒதுக்கப்பட்டிருப்பது இந்தத் திட்டத் தையே முழுவதுமாக முடக்குவதற்கான முயற்சியாகும்.

மதுரை, கோவை, மெட்ரோ ரெயில், திட்டங் களை முற்றிலுமாக ஒன்றிய அரசு புறக்கணித்து இருக்கிறது. தமிழ்நாட்டிற்கான ரெயில்வே திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யாமல்ஒன்றிய அரசு பாரபட்சமாக செயல்படுகிறது. வழக்கமாக நிதியமைச்சர் திருக்குறளை மேற்கோள் காட்டி பட்ஜெட் உரையை தொடங்குவார். ஆனால் இந்த முறை அதையும் விட்டு விட்டார்.

சட்டமன்றத் தேர்தலை தமிழ் நாடு எதிர்நோக்கியுள்ள போதும் ஒன்றிய பா.ஜ.க .அரசு, பெயரளவுக்கு கூட தமிழ்நாட்டிற்கு திட்டங்களை அறிவிக்க முன்வரவில்லை.

தொடர்ந்து தமிழ் நாட்டை புறக்கணிக்கும் ஒன் றிய பா.ஜ.க. அரசை கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், பிப்ரவரி 12ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய, நகரங்களில் நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் மறுமலர்ச்சி தி.மு.க. நிர்வாகி கள் தொண்டர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும். கழக மாவட்ட செயலாளர்கள் ஆர்ப்பாட் டத்தை ஒருங் கிணைத்து வெற்றி பெற செய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறு வைகோ அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சவுதி-பாகிஸ்தான் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் இந்தியாவுக்கு அபாயமா?

மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

புதுடெல்லி, பிப். 9 -

சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் இடையே கையெழுத்திடப்பட்டுள்ள பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், ஒன்றிய அரசின் கவனத்திற்கு கேள்வி கேட்டார்.

அந்த ஒப்பந்தம் குறித்து அரசு அறிந்துள்ளதா? அப்படியானால், அந்த நிலைமையை சமாளிக்க ஒன்றிய அரசு எடுக்கத் திட்ட மிட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? அல்லது, இதுகுறித்து அறியாததற்கான காரணங்கள் என்ன?

மேலும், இந்த பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் இந்தியாவுக்கு குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் என்ன? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய வெளியுறவு அமைச்சக அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங், சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் இடையே ஒரு மூலோபாய பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களை ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்துள்ளது .

மேலும், இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்கக்கூடிய அனைத்து முன்னேற்றங்களையும் அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது.,

இந்தியாவின் தேசிய நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது.

அத்துடன், பிராந்தியத்தில் உள்ள அனைத்து கூட்டாளி நாடுகளுடனும் இந்தியா தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறது எனவும் வெளியுறவு அமைச்சக அமைச்சர் விளக்கமளித்தார்.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்க

பருவநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கைகளுக்கு, அரசின் பங்களிப்பு போதுமானதாக உள்ளதா?

மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, பிப். 9 -

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 06 ஜனவரி 2026 அன்று மாநிலங்களவையில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், பருவநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கைகளுக்கும், உரிய பங்களிப்பை இந்திய அரசு அளித்து வருகிறதா? என்றும், பாரீஸ் ஒப்பந்தத்தின் படி, வளர்ந்த நாடுகளின் நிதயளிப்பு உறுதி செய்யபபட்டுள்ளதா? என்றும், தேசிய பருவநிலை மாற்ற நிதியத்தை வலுப்படுத்த ஒன்றிய அரசு முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா? என்றும் இதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் துறையின் இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் துறையின் இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

ஐக்கிய நாடுகள் சபையின் 30வது பருவநிலை மாற்ற மாநாட்டில் பிரேசில் நாட்டின் பேலம் நகரில் கடந்த நவம்பர் 2025, இந்திய அரசு பங்கேற்றது. இந்தியா உள்பட வளர்ந்து வரும் நாடுகளில் உயிர்களைப் பாதுகாக்கவும், வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் வேண்டிய தன் அவசியத்தை ஒன்றிய அரசு சுட்டிக்காட்டி யுள்ளது என்றும்,2025 ஆண்டிலிருந்து 2035க்குள், தேசிய பருவநிலை மாற்ற நிதி யத்தின் அளவை மூன்று மடங்காக உயர்த்த வேண்டும் என்றும், இதற்கென வளர்ந்த நாடுகளின் பங்களிப்பை உயர்த்த வேண்டும் என்றும், வளர்ந்து

வரும் நாடுகள், அதிகமாக பாதிக்கப்படுவதால். அவற்றை உடனடியாக பாதுகாக்க வேண்டியது வளர்ந்த நாடுகளின் கடமையாகும் என்றும் ஒன்றிய அரசு வலியுறுத்தியுள்ளது என இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், பாரீஸ் ஒப்பந்தப்படியும் விதி எண் 9.1ன் படியும், வளர்ந்த நாடுகளின் நிதியளிப்பு, தேசிய பருவநிலை மாற்ற நிதியத்திற்கென வழங்கப்பட வேண்டும் என்றும், இந்தியா உள்பட,வளர்ந்து வரும் நாடுகளின் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் பருவநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கைகளுக்கும் வளர்ந்த நாடுகள் உடனடியாக உதவ வேண்டும் என்று ஒன்றிய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது என்றும் சர்வதேச நிலைமை, ஒன்றிய அரசின் தன்னிறைவு திட்டம்,வளர்ச்சித் திட்டங்கள் அனைத்து இனக்குழுக்களின் பாதுகாப்பு ஆகிய அனைத்து முன்னுரிமைகளுக்கும் சமமான நிலையை பாதுகாக்கும் வகையில், ஒன்றிய அரசு ஐக்கிய நாடுகள் சபையின் 30வது பருவநிலை மாற்ற மாநாட்டில் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது என்று இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் விரிவான பதிலை அளித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் மோர்தானா அணைதிறக்கப்பட்டு 25ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி வெள்ளி விழா நினைவு தூணை நீர் வளத்துறை அமைச்சர் - கழக பொதுசெயலாளர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஒன்றிய குழு தலைவர்கள் லோ.ரவிச்சந்திரன் என்.இ.சத்யானந்தம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் தி.மு.க. மண்டல மாநாடு நடக்கும் இடம்!

அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

திருப்பத்தூர், பிப். 9 -

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடக்க இருக்கும் திமுக மண்டல மாநாடு நடக்கும் இடத்தை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் வருகிற 14ந்தேதி திமுக மண்டல மாநாடு நடக்கிறது.

இதில் தமிழ் நாடு முதலமைச்சர், தளபதி மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சடடமன்ற உறுப்பினர்கள் ஊள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கலந்து கொள்கிறார்கள்.

மாநாடு நடக்கும் இடத்தை நெடுஞ்சாலை துறை மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாவட்ட கழக செயலாளர்க.தேவராஜி, மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியில்

ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்ட புதிய அரசு பொது மருத்துவமனை!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

திருச்சி, பிப். 9-

திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி மண்டலம் 3க்கு உட்பட்ட வார்டு 37 , 38 , 39 , 42. 43, ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காட்டூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தரம் உயர்த்தப்பட்ட அரசு பொது சுகாதார மருத்துவமனை வேண்டுமென தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும் திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் கோரிக்கை வைத்திருந்தனர் .

மேலும் இதனையடுத்து தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம் (2023 24) ஆம் ஆண்டு நிதியாண்டின் கீழ் ரூபாய் ஒரு கோடியே 80 லட்சம் மதிப்பீட்டில் அதிநவீன பொது மருத்துவமனையை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார் மேலும் இதே போல் அரியமங்கலம் மாநகராட்சிக்கு உட்பட்ட உள் அரியமங்கலத்தில் 30 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் மற்றும் திருவரம்பூர் மாநகராட்சிக்குட்பட்ட

வ உ சி நகர் பகுதியில் 30 லட்சம் மதிப்பீட்டில் புதிய துணை சுகாதார நிலையம் மற்றும் இதே போல் பொன்மலை பட்டி மாநகராட்சிக்குட்பட்ட ஜே ஜே நகரில் 30 லட்சம் மதிப்பீட்டில் புதிய துணை சுகாதார நிலையம் என 2 கோடியை 80 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற அரசு மருத்துவமனை மற்றும் துணை சுகாதார நிலையங்களை திறந்து வைத்து சிகிச்சைக்காக வந்த மக்களிடம் கோரிக்கைகளை கேட்டதுடன் மருத்துவமனையில் பராமரிப்பு பணிகளையும் பற்றியும் கேட்டறிந்தார் மேலும் இந்நிகழ்வில் மண்டலம் மூன்றின் தலைவர் மதிவாணன், மண்டல 3ன் துணை ஆணையர் சரவணன், உதவி செயற்பொறியாளர் ஜெகஜீவன் ராம் மாவட்ட நல அலுவலர் ஹேம்சந்த் காந்தி, மாநகர நல மருத்துவ அலுவலர் சுபாஷ் காந்தி, காட்டூர் மருத்துவ அலுவலர் கார்த்திகேயன், மற்றும் காட்டூர் பகுதி செயலாளர்கள் நீல மேகம், தர்மராஜ் சிவக்குமார் 43 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் செந்தில், 36 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே. கே.கே கார்த்திக், உட்பட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர் .

தமிழ்நாட்டிலிருந்து - கர்நாடகா வரை செல்லும்

சென்னை - பெங்களூரு நெடுஞ்சாலை திட்டத்தை நிறைவேற்ற அரசு முயற்சிகள் எடுக்காதது ஏன்?

மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, பிப். 9 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் 05.2.26 அன்று மக்களவையில் தமிழ்நாட்டையும், கர்நாடகா மாநிலத்தையும் இணைக்கும் சென்னை பெங்களூரு நெடுஞ்சாலை திட்டத்தை விரைவாக முடிக்காமல், காலம் கடத்துவது ஏன்? என்றும், இதுவரையில் எவ்வளவு நிதி செலவிடப்பட்டுள்ளது? என்றும்,திட்டங்கள் தாமதமாக செயல் படுத்தப்படுவதால் எவ்வளவு நிதிச் சுமை அதிரிக்கிறது என்றும்? சுற்றுச் சூழல் மற்றும் நில ஆர்ஜித பணிகள் எப்போது முடிவடையும்? என்று ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

சென்னை - பெங்களூரு நான்கு வழிச் சாலை தொடர்ந்து பயன்பாட்டு வருவதன் விளைவாக பொருளாதார நடவடிக்கைகள் சீராகவே செயல் பட்டு வருகின்றன என்றும் இதன் நெடுஞ்சாலை விரிவாக்க பணிகள் அரக்கோணம், காஞ்சிபுரம் பகுதியில் 15 கிலோ மீட்டர் அளவிற்கு மட்டும் தடைப்பட்டுள்ளது என்றும், இதனால் புதிய ஒப்பந்ததாரர்களை கண்டறியும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், மொத்த நீளமான 264 கிலோ மீட்டரில் 235 கிலோ மீட்டர்கள் பணி ஏற்கனவே நிறைவடைந்து விட்டது என்றும் ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்கள் மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலளித்தார்.

விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட இ.மண்டகபட்டில், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவாவின் கோரிக்கையை ஏற்று சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கு தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. அந்த இடத்தில் சிறுத்தொழில் நிறுவனம் சார்பில் பெயர் பலகை நிறுவப்பட்டுள்ளது. அதனை சட்டமன்ற உறுப்பினர் அன்னியர் சிவா நேரில் சென்று பார்வையிட்டு அடுத்தக்கட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்தார். அப்பொழுது விக்கிரவாண்டி வட்டாட்சியர் செல்வமூர்த்தி, ஒன்றிய செயலாளர் கில்பட்ராஜ், ஒன்றிய கவுன்சிலர் முகிலன், மு.ஊராட்சி தலைவர்கள் அன்பழகன், கருணாநிதி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.